


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஏப்ரல். 20, 2022 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 195 ❖ ரூ.10

## மயிலாடுதுறைக்கு வந்த தமிழக ஆளுநருக்கு எதிர்ப்பு

# அசம்பாவிதம்

### டிஐஜி தலைமையிலான பாதுகாப்பில் ஆயிரத்தி 850 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போதும் ஆளுநர் மீது கருப்பு கொடி வீச்சு: இந்தியாவின் வளர்ச்சி பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல கலாச்சாரம் பண்பாடு நாகரிகம் உள்ளிட்டவையே: ஆளுநர்

மயிலாடுதுறை , ஏப்,20_

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு நேற்று தமிழக ஆளுநர் ஆர். என்.ரவி சுற்றுப்பயணம் மேற்கொண்டார். திருக்கடையூர் அபிராமி அம்மன் உடனாகிய அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் சுவாமி தரிசனம் மேற்கொண்டார். ஆலய நிர்வாகம் சார்பில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. தொடர்ந்து கோ பூஜை கஜ பூஜை செய்து சுவாமி மற்றும் அம்பாள் சன்னதிகளில் தரிசனம் மேற்கொண்டார். அவருக்கு ஆலயம் சார்பில் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து மன்னம்பந்தல் வழியாக தருமபுர ஆதீனத்தை வந்தடைந்தார்.







அப்போது மன்னம்பந்தல் பகுதியில் தமிழக ஆளுநர் செல்லும் போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் மற்றும் பல்வேறு அமைப்பினர் சார்பில் ஆளுநர் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கண்டன முழக்கமிட்டு கோஷங்கள் எழுப்பினர். தமிழகசட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கும், மசோதாக்களுக்கும் தமிழக ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போடுவதை கண்டித்தும், ஆளுநரை திரும்பச் செல்ல வலியுறுத்தியும் கருப்புக்கொடி ஏந்தி முழக்கமிட்டனர்.

அப்போது ஆளுநர் பார்வையில் போராட்டக்காரர்கள் இருப்பதை மறைக்கும் வகையில் காவல்துறை வாகனத்தை கொண்டு போலீசார் மறைத்தனர். அப்போது போராட்டக்காரர்கள் கருப்புக் கொடியை சாலையில் எரிந்தும் வாகனங்கள் மீதும் கருப்பு கொடிகளை வீசி எரிந்து எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தொடர்ந்து தருமபுர ஆதீனத்தை வந்தடைந்த தமிழக ஆளுநருக்கு பாரதிய ஜனதா கட்சியின் மாநில துணைத்தலைவர் கருப்பு முருகானந்தம் தலைமையில் அக்கட்சியினர் தேசியகொடியை ஏந்தி வரவேற்பளித்தனர். தருமபுரம் ஆதீனம் வாசலில் கவர்னருக்கு பூர்ண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

தொடர்ந்து தருமபுர ஆதீனத்தின் மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளை நேரில் சந்தித்து ஆசிபெற்றார். ஆளுநருக்கு தருமையாதீனம் நடராஜர் உருவச்சிலை வழங்கினார். அதனையடுத்து தருமபுர ஆதீனத்தில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தை ஆளுநர் திறந்து வைத்தார்.

கலையரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆதினம் மடாதிபதி மற்றும் கவர்னர் பங்கேற்று பேசினார்கள். தொடர்ந்து தருமபுர ஆதீனம் தெலுங்கானா மாநிலத்தில் நடைபெற உள்ள புஷ்கரம் விழாவில் பங்கேற்பதற்காக மேற்கொண்ட ஞானரத யாத்திரையை ஆளுநர் கொடியசைத்து துவக்கி வைத்தார். ஆளுநர் வருகையை முன்னிட்டு திருச்சி சரக ஐஜி மேற்பார்வையில் 2 வஜ்ரா வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு மாவட்டம் முழுவதும் தஞ்சை சரக டிஐஜி கயல்விழி தலைமையில் 1850 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். முன்னதாக தருமபுர ஆதீனம் குருமகா சன்னிதானம் உரையாற்றுகையில் கூறும்போது தருமபுர ஆதீன அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் 800 மாணவர்கள் பயிலும் முதல் பள்ளியாக உள்ளது.

தமிழக ஆளுநரின் பெயர் ரவி. ரவி என்றால் சூரியன் ஆளுகிற ஆட்சியாளர்களின் சின்னமும் சூரியனாக உள்ளதால் தமிழகத்திற்கு இரண்டு சூரியன்கள் உள்ளன. மறதி ஒரு வரம். மறதி இருந்தால் மட்டுமே மனிதன் மகிழ்ச்சியாக வாழ முடியும், பசுக்களைப் பராமரிக்க வேண்டும். கால்நடைகளை சரியாக பராமரிக்காததால் கொரோனா போன்ற கொடிய நோய்களுக்கு ஆளாகி உள்ளோம். பள்ளிகளில் நீதி போதனை வகுப்புகளை நீக்கியதால் தான் பண்பாடு மற்றும் கலாச்சார சீர் கெட்டுப் போயுள்ளது. அதனால் கல்வி நிலையங்களில் மீண்டும் நீதி போதனை வகுப்புகளை தொடங்க வேண்டும் என்றார்.

தொடர்ந்து பேசிய தமிழக ஆளுநர் ஆர். என் ரவி பேசுகையில் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதால் தருமபுரம் குருமகாசந்நிதானத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இங்கு உள்ளவர்களை பார்க்கும் போது உண்மையான இந்தியாளன் கண்முன்னே தெரிகிறது. இந்திய நாடு வளமான நாடு. தருமபுர ஆதீனம் நாட்டு மக்களுக்கும் பல்வேறு சேவைகளை ஆற்றி வருவது சிறப்பு கூடியது. குறிப்பாக இக்கட்டான சூழ்நிலைகளில் கொரோனா போன்ற இயற்கை இடர்பாடுகள், கார்கில் போர் நடைபெற்ற போது தாமாக முன்வந்து பல்வேறு உதவிகளை செய்தது பாராட்டுக்குரியது.

இந்தியாவின் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்லாமல் கலாச்சாரம் பண்பாடு நாகரிகம் உள்ளிட்டவற்றை உள்ளடக்கியது. உலகில் உள்ள மக்கள் இயற்கை இடர்பாடுகள் ஒருவருக்கொருவர் சண்டையிடுவது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை அனுதினமும் சந்தித்து வருகிறார்கள். இதற்குத் தீர்வு நாகரீகம் கலாச்சாரம் கல்வி நீதி போதனைகள் பண்பாடு உள்ளிட்டவற்றால் மட்டுமே நலவழிப்படுத்த முடியும். என்றார். இந்தியாவில் எல்லோருக்கும் ஒரே கடவுள் சிவன் என்றும் மதத்தால் மொழியால் உணவால் இந்தியர்கள் பிரிந்திருந்தாலும் அனைவரும் ஒரே குடும்பம் என்று கூறினார்.

இந்தியாவினுடைய ஆன்மீகம் தமிழகத்திலிருந்து தொடங்கப்பட்டது என்றும் அனைவருக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். பின்னர் குத்தாலம் அடுத்துள்ள பழமைவாய்ந்த 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவாவடுதுறை ஆதீன மடத்திற்கு சென்றார். அங்கு அவருக்கு பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. தொடர்ந்து ஆதீனத்தின் பகுதிகளை சுற்றி பார்த்த கவர்னர் திருவாவடுதுறை ஆதீன 24வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகளை நேரில் சந்தித்து ஆசி பெற்றார். அவருக்கு பிரசாதங்கள் மற்றும் நினைவு பரிசை ஆதீனம் வழங்கினார்.

முன்னதாக ஆளுநர் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்த 96 பேர் கைது செய்யப்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் அடைத்துவைத்துள்ளனர்.

### ஆளுநரின் வாகனம் மீது தாக்குதல் நடந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டிற்கு சட்டம், ஒழுங்கு ஏடிஜிபி விளக்கம்

ஆளுநரின் கவனத்தை ஈர்க்க முடியவில்லை என்ற ஆதங்கத்தில் போராட்டக்காரர்கள் காவல்துறையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஒரு சிலர் கையில் ஏந்திய கொடிகளை வீசினர். ஆளுநரின் கான்வாய் சென்ற பின்பு காவல் அதிகாரிகளின் வாகனங்கள் மீது சில கொடிகள் விழுந்தன.

பாதுகாப்பிற்கு இருந்த காவலர்கள் கொடிகளை கைப்பற்றி ஆர்பாட்டக்காரர்களை கைது செய்தனர்; அவர்கள் மீது மயிலாடுதுறை காவல் நிலையத்தில் தகுந்த சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. ஆளுநரின் கான்வாய் மீது கற்கள், கொடிகள் வீசியதாகக் கூறப்படுவதில் எந்த உண்மையும் இல்லை.

## இலங்கை – போராட்டக்காரர்கள் மீது போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்,20_

இலங்கை அரசு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது. இதனால் பெட்ரோல், டீசல், சமையல் கியாஸ் ஆகியவற்றை வாங்க முடியாததால் அந்தப் பொருட்கள் கிடைக்காமல் மக்கள் திண்டாடி வருகின்றனர்.

மின்சார தட்டுப்பாடு காரணமாக நீண்ட நேரம் மின்வெட்டு அமல்படுத்தப்படுகிறது.



உணவு, மருந்துகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

அதிபர் கோத்தபய ராஜபக்சே பதவி விலக கோரி அவரது அலுவலகம் எதிரே ஒரு வாரத்திற்கும் மேலாக தொடர் போராட்டம் நீடித்து வருகிறது. பல இடங்களில் தெருமுனைப் போராட்டங்களும் அதிபருக்கு எதிராக நடைபெற்று வருவதாகச் சொல்லப்படுகிறது.

இந்நிலையில், இலங்கையின் கேகாலை மாவட்டம் ரம்புக்கன பகுதியில் அரசுக்கு எதிராக பொதுமக்கள் போராட் டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைக்க போலீசார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் ஒருவர் பலியாகினார். மேலும், பலர் காயமடைந்து இருப்பதாக தகவல்கள் வெளியாகின.



▶ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னை லேடி வில்லிங்டன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் “நம் பள்ளி நம் பெருமை” பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு தொடக்க விழாவில் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட லதாவுக்கு சான்றிதழை வழங்கினார். அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சென்னை மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, பள்ளிக்கல்வி ஆணையர் க.நந்தகுமார், அரசு உயர் அலுவலர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

## உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையத்திற்கு அடிக்கல் நாட்டினார் பிரதமர் மோடி

அகமதாபாத், ஏப்,20_

குஜராத்தின் தியோடரில் உள்ள பனாஸ் பால் பண்ணையில் பல்வேறு வளர்ச்சித்திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

பிரதமர் நரேந்திர மோடி 3 நாள் அரசு முறை பயணமாக குஜராத் சென்றுள்ளார். அவருக்கு அரசு சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

குஜராத்தில் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி ரூ.22,000 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இந்நிலையில், ஜாம்நகரில் உலக சுகாதார அமைப்பின் உலகளாவிய பாரம்பரிய மருத்துவ மையத்திற்கு பிரதமர் மோடி இன்று அடிக்கல் நாட்டினார்.

அப்போது மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த், உலக சுகாதார அமைப்பின் இயக்குனர் டெட்ரஸ் அதனோம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சர்ப்ரைஸ் கொடுப்பதாக கூறி நிச்சயிக்கப்பட்ட மணமகனை கொல்ல முயற்சி.. பிஹெச்டி மாணவி கைது

ஆந்திரா, ஏப்,20_

சர்ப்ரைஸ் கொடுப்பதாக கூறி திருமணம் நிச்சயிக்கப்பட்ட மணமகனை மலை உச்சிக்கு அழைத்து சென்று கழுத்தை அறுத்து கொலை செய்ய முயன்ற மணமகளை போலீசார் கைது செய்தனர்.





ஆந்திர மாநிலம் அனகா பள்ளியை சேர்ந்த பிஹெச்டி மாணவி புஷ்பாவுக்கும் அதே பகுதியைச் சேர்ந்த ராமகிருஷ்ணா என்பவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் ஐதராபாத்தில் இருந்து திருமணத்தை முன்னிட்டு ஊர் திரும்பிய ராமகிருஷ்ணாவை நண்பர்களுடன் சேர்ந்து பார்ட்டி வைத்துக் கொண்டாடலாம் என்று மலைப்பகுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றார் புஷ்பா.

அங்கு இரண்டு பேரும் சில மணி நேரங்களை செலவிட்டனர். அதன் பின்னர் ‘உனக்கு சர்ப்ரைஸ் கிப்ட் கொடுக்க போகிறேன். எனவே உன் கண்ணை இப்போது கட்டுகிறேன்’ என்று கூறிய புஷ்பா ராமகிருஷ்ணன் கண்ணை தன்னுடைய துப்பட்டாவால் கட்டினார். பின்னர் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ராமகிருஷ்ணா கழுத்தை அறுத்து அவரை கொலை செய்ய முயன்றார்.

இந்த நிலையில் அலறித் துடித்த ராமகிருஷ்ணாவை பார்த்து சற்று மனம் மாறிய புஷ்பா அவரை தன்னுடைய ஸ்கூட்டியில் ஏற்றி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார். மருத்துவமனையில் டாக்டர்களிடம் நாங்கள் இரண்டு பேரும் மலை மீது உள்ள பாபா கோவிலில் இருந்து இறங்கி வந்து கொண்டிருந்தபோது கால் தவறி ராமகிருஷ்ணா கீழே விழுந்துவிட்டார். எனவே காயம் ஏற்பட்டுவிட்டது என்று கூறினார்.

ஆனால் மருத்துவர்கள் அவருடைய பேச்சை நம்பவில்லை. எனவே இதுபற்றி மருத்துவமனை நிர்வாகம் போலீசாருக்கு தகவல் அளித்தது. விரைந்து வந்த போலீசார் நடத்திய விசாரணையின்போது ராம கிருஷ்ணாவை திருமணம் செய்து கொள்ள விருப்பம் இல்லாத காரணத்தால் அவரை கொலை செய்ய முயற்சித்து நாடகமாடியது தெரியவந்தது. இதையடுத்து, புஷ்பாவை கைது செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## உளுந்தூர்பேட்டை அருகே – உலகப் புகழ்பெற்ற கூத்தாண்டவர் கோவில் திருவிழா – திருநங்கைகள் பங்கேற்பு

கள்ளக்குறிச்சி, ஏப்,20_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள கூவாகம் கிராமத்தில் உலகப் புகழ்பெற்ற கூத்தாண்டவர் சுவாமி திருக்கோவில் சித்திரை திருவிழாவில் முக்கிய நிகழ்வான தாலிகட்டிக் கொள்ளும் நிகழ்ச்சி வெகு விமர்சியாக நடைபெற்றது.



இவ்விழாவானது கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகள் நடைபெறவில்லை, இந்த வருடம் அருள்மிகு கூத்தாண்டவர் திருக்கோவில் சித்திரை திருவிழாவை சிறப்பாக கொண்டாடும் வகையில் கடந்த 5-ம்தேதி சாகை வார்த்தல் நிகழ்ச்சியுடன் சித்திரை திருவிழா ஆரம்பமானது. இவ்விழாவானது மகாபாரதத்தில் 18 நாட்கள் நடைபெற்ற போரின் நிகழ்வுகளை கொண்டாடும் வகையில் 18 நாட்கள் திருவிழா நடைபெறும்.

இவ்விழாவில் முக்கிய நிகழ்வான இன்று இரவு சுவாமி திருக்கண் திறத்தல் நிகழ்ச்சி நடைபெற்று, தொடர்ந்து பக்தர்கள் மற்றும் திருநங்கைகள் பூசாரியின் கைகளால் தாலிகட்டிக்கொண்டனர். இவ்விழாவிற்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கர்நாடகா, மும்பை, கல்கத்தா, உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான திருநங்கைகள் வந்து கலந்துகொண்டு அருள்மிகு கூத்தாண்டவர் சுவாமிக்கு அபிஷேக ஆராதனை செய்து வழிபட்டு, கூத்தாண்டவர் சுவாமியை தங்களது கணவனாக பாவித்து பூசாரியின் கைகளால் தாலி கட்டிக்கொண்டு இரவு முழுவதும் ஆடி, பாடி, கும்மியடித்து மகிழ்ந்தனர்.


மேலும் இவ்விழாவில் இப்பகுதியை சுற்றியுள்ள சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து பொதுமக்கள் வந்து கலந்துகொண்டு பொங்கல் வைத்து கூத்தாண்டவரை வழிபட்டு சென்றனர்.

இவ்விழாவிற்கு விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, பண்ருட்டி, திருக்கோவிலூர் ஆகிய நகரங்களில் இருந்து சிறப்பு பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன, மேலும் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் செல்வகுமார் தலைமையில், 4 கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர்கள், 10 துணை கண்காணிப்பாளர்கள், காவல் நிலைய ஆய்வாளர்கள் 34 பேர், 102 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 870 காவலர்கள் இதில் 30 சதவீதம் பெண் காவலர்கள் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் தீயணைப்பு மற்றும் மீட்புபணிகுழுவினர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்,

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்








| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,025 | Rs.5,424 |

## வரலாற்றில் இன்று



1943 இரண்டாம் உலகப் போர்: போலந்தில் கட்டின் என்ற இடத்தில் சோவியத் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட போலந்து போர்க் கைதிகளின் புதைகுழிகளைத் தாம் கண்டுபிடித்ததாக செருமனி அறிவித்தது.

1944 நியூசிலாந்துக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் பண்ணுறவாண்மை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

1945 இரண்டாம் உலகப் போர்: செருமனியில் கார்டெலகான் என்ற இடத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான போர், அரசியல் கைதிகள் நட்சிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

1945 இரண்டாம் உலகப் போர்: சோவியத், பல்கேரியப் படையினர் வியென்னா நகரைக் கைப்பற்றினர்.

1948 எருசலேமில், அதாசா மருத்துவமனையில் இடம்பெற்ற படுகொலைகளில் யூத மருத்துவர்கள், தாதிகள், மாணவர்கள் 78 பேர் கொல்லப்பட்டனர்.

1953 இயன் பிளெமிங் தனது முதலாவது ஜேம்ஸ் பொண்ட் புதினத்தை வெளியிட்டார்.

1954 காமராசர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார்.

1960 ஐக்கிய அமெரிக்கா டிரான்சிட் 1-பி என்ற உலகின் முதலாவது செய்மதி இடஞ்சுட்டல் தொகுதியை விண்ணுக்கு ஏவியது.

1970 நிலா நோக்கிச் சென்று கொண்டிருந்த அப்பல்லோ 13 விண்கலத்தில் ஆக்சிசன் தாங்கி வெடித்து பெரும் சேதம் ஏற்பட்டது.

1974 ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது வணிக புவி நிலைத் துணைக்கோள் வெஸ்டார் 1 ஏவப்பட்டது.

1975 லெபனானில் 27 பாலத்தீனர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு 15-ஆண்டுக்கால உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

1976 பின்லாந்தில் வெடிபொருள் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட விபத்தில் 40 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

1979 இலங்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

1987 மக்காவு தீவை மக்கள் சீனக் குடியரசிடம் 1999 இல் ஒப்படைக்கும் ஒப்பந்தம் போர்த்துக்கலுக்கும் சீனாவுக்கும் இடையில் எட்டப்பட்டது.

## புதுக்கோட்டையில் தூய்மைப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க கோரி சிஐடியு ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை ஏப்.20-

மேல்நிலை தொட்டி இயக்குனர்கள், தூய்மைப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்களுக்கு பணிநிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வலியுறுத்தி நேற்று புதுக்கோட்டையில் சிஐடியு சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகம் அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு புதுக்கோட்டை மாவட்ட உள்ளாட்சி துறை தொழிலாளர் சங்கத் (சிஐடியு) தலைவர் கே.முகம்மதலி ஜின்னா தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி சிஐடியு மாவட்டச் செயலாளர் ஏ.ஸ்ரீதர், துணைத் தலைவர்கள் சி.அன்பு மணவாளன், எஸ்.யாசிந்த், துணைச் செயலாளர்கள் சி.மாரிக்கண்ணு, ரெத்தினவேல் உள்ளிட்டோர் பேசினர்.

மேல்நிலை தொட்டி இயக்குனர்கள், தூய்மைப் பணியாளர்கள், தூய்மைக் காவலர்களுக்கு பணிநிரந்தரம் செய்து காலமுறைஊதியம்வழங்க வேண்டும். தூய்மைப் பணியாளர்களுக்கு 31 விழுக்காடு அகவிலைப்படியை இணைத்து புதிய ஊதியம் நிர்ணயம் செய்து நிலுவைத் தொகையை வழங்க வேண்டும். தூய்மைக்காவலர்களுக்கு மகளிர் குழு மூலம் சம்பளம் வழங்குவதைத் தவிர்த்து ஊராட்சி நிர்வாகம் மூலமாக வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்டன.

## புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மாவட்ட அளவிலான உடற்கட்டமைப்பு போட்டி



புதுக்கோட்டை ஏப்.20-

மௌண்ட் சீயோன் பள்ளிகளின் நிறுவனர் தலைவர் ஜெயபாரதன் செல்லையா நினைவு தினத்தை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்ட அமெச்சூர் ஆணழகன் சங்கம் இணைந்து, மாவட்ட அளவிலான உடற் கட்டமைப்பு போட்டியை அண்மையில் புதுக்கோட்டையில் நடத்தியது. பல்வேறு உடற் பயிற்சி கூடங்களிலிருந்து உடலமைப்பாளர்கள் பல்வேறு பிரிவுகளில் பங்கேற்றனர்.

தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் இந்நிகழ்ச்சியானது துவங்கியது. மௌண்ட் சீயோன் பள்ளிகளின் நிறுவன தலைவருக்கு, மரியாதை செலுத்தும் வகையில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வழக்கறிஞர் ஜவஹர் வரவேற்புரை வழங்கினார். மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் ஜோனத்தன் ஜெயபாரதன், சிறப்பு விருந்தினர் ஆ.ஆ.அப்துல்கர் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களையும் வரவேற்று கௌரவித்தார். மிஸ். தமிழ்நாடு பட்டம் பெற்ற ஷெனாஸ் பேகம் மற்றும் மிஸ்டர் ஆசியா, மிஸ்டர் இந்தியா பட்டம் வென்ற சரவணன் ஆகியோர் டெமோ செய்துகாட்டினர்.

இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை புதுக்கோட்டை மாவட்ட அமெச்சூர் ஆணழகன் சங்கத்தலைவர் ஜோனத்தன் ஜெயபாரதன், கௌரவத் தலைவர் ஜெயக்குமார், செயலாளர் சு.கிருஷ்ணமுனி, பொருளாளர் ஏ.பாஸ்கரன், தமிழ்நாடு அமெச்சூர் ஆணழகன் அசோசியேஷன் தலைவர் ராஜேந்திரகுமார், தமிழகபொதுச்செயலாளர் அமெச்சூர் ஆணழகன் அசோசியேஷன் மற்றும் தமிழ்நாடு அமெச்சூர் ஆணழகன் அசோசியேஷன் பொருளாளர் ஜரான் போஸ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

## காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குளறுபடிகளைக் களையக்கோரி ஓய்வூதியர்கள் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை ஏப்.20-

தற்போதுள்ள காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குளறுபடிகளை களைந்து அனைத்து ஓய்வூதியர்களுக்கும் இலவச மருத்துவ சிகிச்சை கிடைக்கும் வகையில் அரசாணை வெளியிடக்கோரி ஓய்வூதியர்கள் புதுக்கோட்டையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

புதுக்கோட்டைதிலகர் திடலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் மா.வேலாயுதம் தலைமை வகித்தார். கோரிக்கைகளை விளக்கி மாவட்டத் தலைவர் மு.முத்தையா மற்றும் நிர்வாகிகள் ஆர்.ராஜேந்திரசிங், இரா.சுப்பிரமணியன், என்.ராமச்சந்திரன் உள்ளிட்டோர் பேசினர்.

தற்போதுள்ள காப்பீட்டுத் திட்டத்தில் உள்ள குளறுபடிகள் களைந்து அனைத்து ஓய்வூதியர்களுக்கும் இலவச மருத்துவ சிகிச்சை கிடைக்கும் வகையில் அரசாணை வெளியிட வேண்டும். தமிழக முதல்வர் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி 70 வயது முடிவுற்ற ஓய்வூதியர்களுக்கு 10 விழுக்காடு ஊதிய உயர்வு வழங்க வேண்டும். புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர வேண்டும். குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.7850 வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் எழுப்பப்பட்டன.




### புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில்

## ஸ்ரீ கலாலயா நாட்டியப் பள்ளியின் ஏழாம் ஆண்டு சலங்கை பூஜை



புதுக்கோட்டை ஏப்.20-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மாதா மக்கள் மன்றத்தில் ஸ்ரீ கலாலயா நாட்டியப் பள்ளியின் ஏழாம் ஆண்டு சலங்கை பூஜை விழா மற்றும் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நாட்டிய நிகழ்ச்சியில் 11 நடன மணிகளின் சலங்கைபூஜை அரங்கேற்றம் செய்தனர் இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக திருமயம் பங்குத்தந்தை ஜேம்ஸ் ராஜ், பி.ராமன், ,திருமயம் கூட்டுறவு வங்கி தலைவர் எம் பி சரவணன் ,திமுக ஒன்றிய கவுன்சிலர் சரண்யா சரவணன், தலைமையா சங்கீதா ராம்தாஸ் வரவேற்றார். குரலிசை கலைஞர் வள்ளிக்கண்ணு, வெங்கடேஸ்வரன் நன்றி கூறினார். மேலும் விழாவில் பெற்றோர்களும் ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டார மருத்துவ துறை சார்பில் வட்டார அளவிலான சுகாதார திருவிழா



புதுக்கோட்டை ஏப்.20-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டார மருத்துவ துறை சார்பில் வட்டார அளவிலான சுகாதார திருவிழா அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இதில் ஏராளமான பெண்கள் மற்றும் கர்ப்பிணிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். முன்னாள் முதல்வர் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் மற்றும் வட்டார மருத்துவ திருவிழா ஆகியவற்றை சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் கார்த்திக் சிதம்பரம் துவக்கி வைத்தார் .இம்மருத்துவ முகாமில் ஏராளமான பரிசோதனைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றை பயன்படுத்தி கொள்ளுங்கள் மேலும் பாராளுமன்றத்தில் பெண்களின் திருமண வயது 21 என சட்டம் கொண்டு வரப்படுகிறது.

முழுமையான உடல், மன வளர்ச்சி அடைந்த பின் திருமணம் செய்து கொள்ளுங்கள் என்றார். இம்மருத்துவ முகாமை முன்னிட்டு பல்வேறுதுறை அரங்குகள் இடம் பெற்று இருந்தன. தேசியகாசநோய் தடுப்பு பிரிவு அனைத்து மருத்துவ காப்பீடு உடல் பரிசோதனை, பெண்கள் ஊட்டச்சத்து விழிப்புணர்வு என ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இவற்றையும் சிவகங்கைஎம்.பி.கார்த்திக் சிதம்பரம் பார்வையிட்டு பாராட்டு தெரிவித்தார். இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் செவிலியர்கள்மிகசிறப்பாக பணியாற்றுகிறார்கள்.

இம்மருத்துவ முகாமை அரசுபெண்கள்மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் சுகாதாரத்துறை ஆய்வாளர்கள் ஆரம்ப சுகாதார செவிலியர்கள் ஒன்று சேர்ந்து ஏற்பாடு செய்து இருந்தனர். இம்முகாமில் 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் மனோஜ் நன்றி கூறினார். மேலும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இராம.சுப்புராம், ஊராட்சி மன்ற தலைவர் சிக்கந்தர், வடக்குவட்டாரகாங்கிரஸ் தலைவர் முருகேசன், காங்கிரஸ் மாவட்ட செயலாளர் அக்பர் அலி, மாவட்டதுணை தலைவர் இப்ராஹிம், கவுன்சிலர் கணேஷ் சுப்புராம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சின்னக்கருப்பன், முன்னாள் வட்டார தலைவர் பழனிசாமி, அன்பு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## அரியலூர் மாவட்டம் 18-வது வார்டு காளியம்மன் கோவிலில் கோடை விழா



அரியலூர் ஏப்.20-

அரியலூர் மாவட்டம் 18-வது வார்டு காளியம்மன் கோவிலில் கோடை விழா நடைபெற்றது

அரியலூர் மாவட்டம் 18-வது வார்டு பெரிய தெருவில் உள்ள தேசமுத்து மாரியம்மன் கோவில் முன்பாக காளியம்மன் கோவில் உள்ளது. அங்கு கோடை விழாவை முன்னிட்டு, காளியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனை மற்றும் அசைவ படையல் நடத்தி, பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

பக்தி சிரத்தையுடன் நடைபெற்ற இவ்விழாவிற்கு, நகராட்சி 18- வது வார்டு கவுன்சிலர் மு.க.புகழேந்தி தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக அப்பகுதிக்கு வந்த, தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர், கட்சி கொடியேற்றி அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

விழாவில் திமுக அரியலூர் நகர செயலாளர் முருகேசன், மற்றும் வார்டு பிரமுகர்கள் சீனிவாசன், வில்லவன், செல்வகுமார், விமல், புகழ் மணிகண்டன், ஸ்டாலின், மணிகண்டன், செந்தில் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## தஞ்சையில் ஏடகம் கல்வி, சமூக மேம்பாட்டு மற்றும் ஆய்வு மையம் சார்பில் பாரதியின் சூழலியல் குறித்த சொற்பொழிவு



தஞ்சாவூர் ஏப்.20-

பாரதி நூற்றாண்டு விழாவின் பொருட்டு பாரதியின் சூழலியல் சிந்தனைகள் என்ற தலைப்பில் சொற்பொழிவு நடைபெற்றது.

இதில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கட்டடக்கலைத் துறைத் தலைவர் மற்றும் இலக்கியத் துறையின் இணைப்பேராசிரியர் திலகவதி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அப்போது உரையில் காடு வளர்த்தல் பற்றி குறிப்பிடும்போது பாரதி தன்னுடைய வசன கவிதையில் நல்ல காடு வளர்த்தல் என்ற வரியினைப் போட்டுப் பாடியுள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் சுனாமி ஏற்பட்டபோது நாட்டு மரங்கள் பாதுகாத்து நின்றன. அதேபோல சென்னையில் பெருவெள்ளம் ஏற்பட்ட போது செயற்கையாக உருவாக்கப்பட்ட மரங்கள் எல்லாம் காற்றில் தூக்கி வீசப்பட்ட போது, நாட்டு மரங்கள் தான் நிலைத்து நின்றன. அந்த வகையில் பாரதி நல்ல காடு என்று குறிப்பிட்டது நம் பாரம்பரிய மரங்களைத்தான். இதைத்தான் சங்க நூல்களும், திருக்குறளும் காட்டு அரண், நீர் அரண், கோட்டை அரண் என்று குறிப்பிடுகின்றன. பாரதி எழுதிய கவிதைகளில் அவர் எவ்வாறு இயற்கையைப் போற்றிப் பாடியுள்ளார் என்பதைப் பல வரிகளை எடுத்துக் கூறி விளக்கினார்.

இந்நிகழ்வில் முன்னதாக மோகன் அனைவரையும் வரவேற்றார். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற உதவிப் பதிவாளர் ஜம்புலிங்கம் தலைமையுரை யாற்றினார். சுவடியியல் மாணவர் சரவணன் நன்றி கூற, சூழலியல் மாணவியும் ஆசிரியையுமான மாலதி நிகழ்வினைத் தொகுத்து வழங்கினார். இக்கூட்டத்தில் அறிஞர்களும் மாணவர் மாணவியரும் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவிலில்

## மத்திய அரசைக் கண்டித்து ஐக்கிய விவசாய முன்னணியினர் கண்டன ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை ஏப்.20-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் கடைவீதியில் மத்திய அரசு குறைந்தபட்ச ஆதார விலையை சட்டமாக்க வேண்டும் என்று வலியுறுத்தி ஐக்கிய விவசாய முன்னணியினர் கண்டன ஆர்ப்பாட்டம்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் கடைவீதியில் நேற்று மாலை 4 மணி அளவில் வேளாண் சட்டங்களைவாபஸ்பெற்ற மத்திய விவசாயிகளுக்கு அரசு குறைந்தபட்ச ஆதார விலையை சட்டமாக்க வேண்டும் என்றும், 5 மாநில தேர்தலை காரணம் காட்டி மத்திய அரசுஎம்எஸ் சுவாமிநாதன் குழுபரிந்துரை செய்த (C2 +50) என்கிற பரிந்துரையை சட்டம் ஆக்கினாள் விவசாயிகள் உற்பத்தி செய்யப்படுகின்ற விளைபொருளுக்கு அதை விட ஒன்றரை மடங்கு அதிகமான அளவில் விலை நிர்ணயம் அரசு செய்தால் இந்தியாவில் இருக்கின்ற விவசாயிகள் இனிமேல் விவசாயத்தை நம்பி வாழலாம். எம்எஸ் சுவாமிநாதன் குழு பரிந்துரையை சட்டம் ஆகாததால் சுமார் 4லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்திருக்கிறார்கள்.

இந்த நிலை இனி தொடராது என்பதை வலியுறுத்தி ஐக்கிய விவசாயிகள் முன்னணி ஆவுடையார்கோவில் கடைவீதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள் .இந்த கண்டனஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர்கள். C ராதாகிருஷ்ணன் மற்றும் M.S. கலந்தர் ஆகியோர் தலைமை தாங்கினர்.

நிகழ்ச்சியில் சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர்கள் சேவுகப்பெருமாள், விகே காமாட்சி மற்றும் சிபிஎம் ஒன்றியசெயலாளர்நெருப்பு முருகேசன்சிபிஎம்மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சுப்பிரமணியன் மற்றும் சிபிஐமாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் சுந்தரராஜன் ஆகியோர் விளக்கிப் பேசினார்கள். நிகழ்ச்சியில் 40-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# விஜய் மக்கள் இயக்கம் சார்பாக ஏழை மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் விழா



செங்கல்பட்டு, ஏப். 20:
செங்கல்பட்டு மாவட்ட இலத்தூர் ஒன்றியம் விஜய் மக்கள் இயக்கம் சார்பாக மாநில பொதுச்செயலாளர் புஸ்ஸி.ஆனந்த் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட தலைவர் சூரியநாராயணன் வழிகாட்டுதலின்படி மடையம்பாக்கம் அரசு பள்ளியின் ஆசிரியர்களை கௌரவிக்கும் விதமாக பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்களுக்கு பொன்னாடைஅணிவித்து பரிசுகள் தளபதி டாக்டர் விஜய் மக்கள் இயக்கம் சார்பில் கவுரவித்தனர் இன் நிகழ்வில் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

நிகழ்ச்சி ஏற்பாடு மடையம்பாக்கம் தளபதி ர.கோகுல் மடையம்பாக்கம் கி.டில்லிபாபு மற்றும் மடையம்பாக்கம் நிர்வாகிகள், இலத்தூர் ஒன்றிய நிர்வாகிகள் மா.கோபிநாத் விஜயகுமார், ராஜா மற்றும் மடையம்பாக்கம் சி.சிவா ஏ.பாண்டுரங்கன் ஏ.ஹேமநாத்டேனியல் ஆகியோர் கலந்துகொண்டனர்

# திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலர்கள் கோயம்பேட்டில் தமிழ் புத்தாண்டையொட்டி சிறப்பு ஆம்னி பேருந்துகள் தணிக்கை

வரி கட்டாத ஆம்னி பேருந்து சிறை பிடிப்பு




சென்னை, ஏப். 20:
தமிழ் புத்தாண்டு மற்றும் புனித வெள்ளி போன்றபண்டிகைகளுக்கு நான்கு நாட்கள் தொடர்ச்சியாகவிடுமுறை வருவதால் சென்னையில் வசிப்பவர்கள் ஊர்களுக்கு செல்ல வேண்டியிருப்பதால் ஒரு சில ஆம்னி பேருந்துக்கள் இதை பயன்படுத்தி அதிக கட்டணம் போன்ற முறைகேடுகளில் ஈடுபடுவதை தடுக்க தமிழ்நாடு போக்குவரத்து துறை தமிழகம் முழுவதும் சிறப்புத் தணிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டது.

அதன்படி சென்னை வடக்கு சரக இணை போக்குவரத்து ஆணையர் ரவிச்சந்திரன் அவர்களின் உத்தரவின் பேரில், திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலர் சு.மோகன் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் கோ.மோகன், கா.பன்னீர் செல்வம்மற்றும்நா.லீலாவதி ஆகியோர்கோயம்பேட்டில் சுமார் 110 வாகனங்களை ஆய்வு செய்து 12 தணிக்கை அறிக்கை வழங்கி 15,000 ரூபாய்இணக்கக்கட்டனம் வசூலித்தும், சாலை வரி கட்டாத ஒரு வாகனத்தை சிறை பிடித்து அதற்கு ரூபாய் 90,000 வரி வசூல் நிர்ணயம் செய்தும் நடவடிக்கைஎடுத்தார்கள்.

### 10,11,12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுத

# தனித்தேர்வர்கள் தங்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை இன்று முதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்

சென்னை , ஏப். 20:
10,11,12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுத உள்ள தனித்தேர்வர்கள் தங்களுக்கானதேர்வுக்கூட நுழைவுச்சீட்டுகளை இன்று முதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என அரசுத் தேர்வுத்துறை அறிவித்துள்ளது.

இது குறித்து அரசுத் தேர்வுத்துறை இயக்குநர் சேதுராமவர்மா வெளியிட்டுள்ள அறிவிப்பில், "10,11,12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வினை எழுதுவதற்கு விண்ணப்பம் செய்த தனித்தேர்வர்கள் தங்களுக்கானதேர்வுக்கூட நுழைவுச்சீட்டினை 20ஆம் தேதி பிற்பகல் முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். 11ஆம் வகுப்பில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு 12ஆம் வகுப்பிற்கும் சேர்த்து தேர்வுக்கூடநுழைவுச்சீட்டு வழங்கப்படும்.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு அறிவியல் பாடசெய்முறைத்தேர்வுகள் 27.4.2022 முதல் 29.4.2022 வரை, செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்ற பள்ளிகளிலேயே நடைபெறவுள்ளன. அறிவியல் பாட செய்முறைத்தேர்வுக்கான தேதி குறித்த விவரத்தை தனித்தேர்வர்கள் செய்முறைப்பயிற்சி பெற்ற பள்ளி தலைமையாசிரியரிடம் அறிந்துகொள்ளவேண்டும். உரிய தேர்வுக்கூட அனுமதிச்சீட்டின்றி எந்த ஒரு தேர்வரும் தேர்வெழுத அனுமதிக்கப் படமாட்டார்.

மே 2022 பொதுத்தேர்விற்கான கால அட்டவணையை www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று அறிந்துகொள்ளலாம்' என அதில் கூறியுள்ளார்.

# திருமருகல் அருகே மத்தளங்குடி–பில்லாளி ஆபத்தான நிலையில் உள்ள சாலையை சீரமைக்க வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை



**நாகப்பட்டினம், ஏப்.20–**
திருமருகல் அருகே மத்தளங்குடி-பில்லாளி ஆபத்தான சாலையை சீரமைக்கவேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆபத்தான சாலை நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் பில்லாளி ஊராட்சி மத்தளங்குடி, அனவாசநல்லூர், பில்லாளி கிராமங்களில் 300-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். மேற்கண்ட கிராமங்களை இணைக்கும் முக்கிய சாலை உள்ளது.

இந்த சாலை 2 கிலோ மீட்டர் தூரம் கொண்ட சாலை. மேற்கண்ட பகுதிகளை சேர்ந்த மக்கள் இந்த சாலை வழியாக பில்லாளி வந்து அங்கிருந்து திருவாரூர் ,நாகப்பட்டினம், திருப்பயத்தாங்குடி, திருமருகல், திருக்கண்ணபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று வர பயன்படுத்தி வந்தனர். அதேபோல் விவசாயிகள் தாங்கள் விளைவித்த பொருட்களை உள்ளூர் மற்றும் வெளியூர்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் இந்த சாலையை தான் பயன்படுத்திவருகின்றனர்.

மேற்கண்ட கிராமங்களை சேர்ந்த பள்ளி மாணவ மாணவியர்கள் இந்த வழியாக சென்று திருக்கண்ணபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு சென்று வருகின்றனர். இந்த நிலையில் பில்லாளி செல்லும் 3 கிலோமீட்டர் தூரம் கொண்ட சாலை சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக சேதமடைந்து ஜல்லி கற்கள் பெயர்ந்து குண்டும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் சாலையில் செல்லும் வாகன ஓட்டிகள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். சாலையில் மின் விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் இருசக்கர வாகனங்களில் செல்பவர் சாலையில் பள்ளம் இருப்பது தெரியாமல் ஜல்லிகற்களில் நிலைதடுமாறி கீழே விழுந்து படுகாயம் அடைகின்றனர்.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பலமுறை புகார் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வேதனை தெரிவிக்கின்றனர். எனவே ஜல்லி கற்கள் பெயர்ந்து ஆபத்தான நிலையில் உள்ள சாலையை சீரமைக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்து காத்துள்ளனர்.




# கழிவுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட கலைப்பொருட்களை முதலமைச்சர் பார்வையிட்டார்



சென்னை , ஏப். 20:
தமிழ்நாடுமுதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற பேரூராட்சி தலைவர்கள் மற்றும் துணை தலைவர்களுக்கான நிர்வாக பயிற்சி நிறைவு விழாவில் கழிவுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட கலைப்பொருட்கள் கண்காட்சியை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியின் போது நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமைச் செயலர் வெ.இறையன்பு, நகராட்சிநிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைவர் செயலர் சிவ்தாஸ் மீரா, பேரூராட்சிகளின் ஆணையர் முனைவர் ஆர்.செல்வராஜ் மற்றும்கருங்குழிபேரூராட்சி செயல் அலுவலர் ம.கேசவன் ஆகியோருடன் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# புதிய பொறுப்பாளர்கள் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**நாகப்பட்டினம், ஏப்.20–**
திருமருகல் வடக்கு, தெற்கு ஒன்றியம் மற்றும் திட்டச்சேரி பேரூராட்சியில் புதிதாக பொறுப்பேற்றுள்ள நிர்வாகிகள் அனைவரும் திருமருகல் மெயின்ரோட்டில் அமைந்துள்ள எம்ஜிஆரின் திருவுருவ சிலைக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆசைமணி தலைமையில் வடக்கு ஒன்றிய செயலாளர் இராதாகிருட்டிணன், தெற்குஒன்றியசெயலாளர் பக்கிரிசாமி, திட்டச்சேரி பேரூர் செயலாளர் அப்துல் பாசித் மற்றும் ஒன்றிய,நகர நிர்வாகிகள் எம்ஜிஆரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# நாகை அருகே இந்தி மொழி திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆர்ப்பாட்டம்



**நாகப்பட்டினம், ஏப்.20–**
நாகை மாவட்டம் திட்டச்சேரி பஸ் நிலையத்தில் இந்தி மொழி திணிப்பு எதிர்ப்பு தெரிவித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் ஒன்றிய செயலாளர்ஸ்டாலின்பாபு தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் மாரிமுத்து கண்டன உரை நிகழ்த்தினார். ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட்டில் இந்தி மொழியை திணிக்கும் மத்திய அரசின் நடவடிக்கைகளைக் கண்டித்தும், பல்கலைக்கழகங்களில் நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தியும், பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வை கட்டுப்படுத்த வலியுறுத்தியும், அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டது.

இதில் மாவட்டக்குழு உறுப்பினர் லெனின், முன்னாள் மாவட்ட குழு உறுப்பினர் ஜெயபால், விவசாய சங்க மாவட்ட பொருளாளர் பொன்மணி, ஒன்றியக்குழு உறுப்பினர்கள் பாரதி, கஸ்தூரி, பாலு, பிரபாகரன் மற்றும் கட்சி நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் கலந்து கொண்டனர்.




# தெருமுனை பிரச்சாரக் கூட்டம்



**நாகப்பட்டினம், ஏப்.20–**
நாகை மாவட்டம் திருமருகல் சந்தைப்பேட்டை கடைத்தெருவில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திருமருகல் ஒன்றிய விவசாய சங்க செயலாளர் தங்கையன் தலைமை தாங்கினார். மாவட்ட விவசாய சங்க செயலாளர் பாபுஜி முன்னிலை வகித்து கோரிக்கைகளை விளக்கி கூட்டத்தில் பேசினார்.

கூட்டத்தில் பயிர் காப்பீட்டு தொகை உடனடியாக வழங்க வேண்டும், விவசாயிகளுக்கு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணயிக்க வேண்டும், மூன்று வேளாண் சட்டங்களை வாபஸ்பெற்றுசட்டமாக்க வேண்டும், 2021-22 பயிர் காப்பீட்டு தொகையை உடனடியாக வழங்க வேண்டும், பெட்ரோல், டீசல், கேஸ் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தி பேசினர்.

இதில் விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் தமிழரசன், கட்சியின் ஒன்றிய பொருளாளர் சந்திரசேகர், இளைஞர் பெருமன்ற ஒன்றிய செயலாளர் ரமேஷ் மற்றும் நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

### குத்தாலம் அருகே அசிக்காடு முத்துமாரியம்மன் கோவிலில்

# சித்ரா பௌர்ணமி விழாவையொட்டி ஏராளமான பக்தர்கள் காவடி எடுத்து வந்து அம்மனுக்கு அபிஷேகம்



குத்தாலம், ஏப்.20:
மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா அசிக்காடு கிராமத்தில் பழமை வாய்ந்தமுத்துமாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. இக்கோவிலில் அம்பாளை வழிபட்டால் 16வகையான செல்வங்களும்கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

இக்கோவிலில் ஆண்டுதோறும் சித்ரா பவுர்ணமி விழா நடைபெறுவது வழக்கம். இவ்வாண்டு சித்ராபவுர்ணமி விழா கடந்த மூன்றாம் தேதி தொடங்கியது. சித்ரா பௌர்ணமியான இன்று ஏராளமான பக்தர்கள் பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்ப காவடி, சந்தனக் காவடி, அலகு காவடி என பல்வேறு வகையான காவடிகள் எடுத்து வந்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

தொடர்ந்து அம்பாளுக்கு அபிஷேக, ஆராதனைகள் செய்து வழிபாடுநடத்தினர். மாலை வான வேடிக்கையுடன் முத்துமாரி அம்மன் வீதிஉலா காட்சி நடைபெற்றது. பூஜைஅறை கோபால்சிவாச்சாரியார் மற்றும் ஆலய பூசாரி உத்திராபதி ஆகியோர் செய்திருந்தனர். விழா ஏற்பாடுகளை செல்வ முத்துக்குமரன், அசிக்காடு கிராம வாசிகள் மற்றும் இளைஞர் நற்பணி மன்றத்தினர் செய்திருந்தனர்.



▶ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக விளையாட்டு மைதானத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பாக நேற்று மாவட்ட அளவில் நடைபெற்ற மாற்று திறனாளிகளுக்கான தடகளம் மற்றும் குழு விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் துவக்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார் .உடன் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் செ .அருணா மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ச.பாபு மாற்றுத்திறனாளிகளின் பாதுகாவலர்கள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 500 மனுக்கள் பெறப்பட்டன



தி.மலை , ஏப். 20:
திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் நடந்த மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து 500 மனுக்கள் பெறப்பட்டன. திருவண்ணாமலை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) பிரதாப் தலைமை தாங்கி பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். அதில் கல்வி உதவித்தொகை, வங்கி கடனுதவி, முதலியோர் உதவித்தொகை, வீட்டு மனைபட்டா'சாதிசான்று வேலைவாய்ப்பு மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உபகரணங்கள் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 500 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கூடுதல் கலெக்டர் வழங்கி உடனடி நடவடிக்கைமேற்கொள்ள உத்தரவிட்டார். மேலும் நிலுவையில் உள்ள மனுக்களின் தொடர் நடவடிக்கைகள் குறித்தும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் அவர் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டம் தனித்துணை கலெக்டர் வெங்கடேசன் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் பார்த்திபன் மற்றும் பல்வேறு துறைகளில் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



▶ மயிலாடுதுறை மாவட்டம், செயின் பால்ஸ் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் கப்பலேர்டடிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 150வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது வாழ்க்கை வரலாற்றினை பள்ளி மாணவ, மாணவியர்கள் பார்த்து பயன்பெரும் வகையில் நகரும் வாகன ஊர்தி சிறப்பு புகைப்பட கண்காட்சி வாகனத்திலுள்ள வ.உ.சிதம்பரனாரின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.லலிதா மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

# கள்ளக்குறிச்சி அருகே ரிஷிவந்தியத்தை தாலுக்காவாக அறிவிக்க கோரி பொதுமக்கள் சாலை மறியல்



கள்ளக்குறிச்சி ஏப்.20–

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதியில் உள்ள, ரிஷிவந்தியத்தை தாலுகாவாக அறிவிக்க கோரி கடந்த 30 ஆண்டுகளாக அப்பகுதி மக்களும், அரசியல் பிரமுகர்களும், சமூக ஆர்வலர்களும்கோரிக்கை விடுத்து வருகின்றனர்,

கடந்த10ஆண்டுகளுக்கு முன்பு ரிஷிவந்தியம் சட்டமன்றஉறுப்பினராக இருந்த தேமுதிக தலைவர் விஜயகாந்த் சட்டமன்றத்தில் ரிஷிவந்தியம் தாலுக்கா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினார்,அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணத்தால் அப்போதையதமிழகஅரசு அதை கண்டு கொள்ளவில்லை, இதனைத் தொடர்ந்து, அப்பகுதி பொதுமக்களும் பல்வேறு காலகட்டங்களில்பல்வேறு போராட்டங்களையும் நடத்திவந்தனர்,

இதனைத் தொடர்ந்து கடந்த சட்டமன்ற தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ரிஷிவந்தியத்தை தாலுகாவாக உருவாக்குவோம் என தேர்தல் வாக்குறுதி அளித்திருந்த நிலையில் தற்பொழுது நடைபெற்ற சட்டமன்ற கூட்டத்தொடரில் வருவாய் துறை அமைச்சர் ராமச்சந்திரன் ரிஷிவந்தியம்அருகேஉள்ள வாணாபுரம் கிராமத்தை தாலுகாவாகஅறிவித்ததை அறிந்த ரிஷிவந்தியம் பகுதி பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்தனர், இதனால் பொதுமக்கள் திமுக சார்பில் அமைக்கப்பட்டிருந்த நீர் மோர் பந்தலை பிரித்தெறிந்தனர்,

தொடர்ந்து இப்பகுதியை சேர்ந்த அனைத்து கட்சியினரும் பாகுபாடு பார்க்காமல் பொதுமக்களுடன் சேர்ந்து ரிஷிவந்தியத்தை தாலுகாவாக அறிவிக்க கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர். இத்தகவலறிந்த காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர், ஆனால் தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்டு வந்ததால், இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# ஆலங்குடியில் தமிழக அரசுக்கு எதிராக ஓய்வூதியர்கள் சங்கம் சார்பில் கோரிக்கை ஆர்ப்பாட்டம்



ஆலங்குடி, ஏப்.20–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி வட்டக்கிளை சார்பாக ஆலங்குடி வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் வட்டத்தலைவர்ராஜசேகர் தலைமையில் கோரிக்கை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வட்டத்துணைத்தலைவர் கருப்பையா வரவேற்புரையாற்றினார், கந்தசாமி, அருளாந்து, செல்லையா வாழ்த்துரையாற்றினர், மாவட்ட தலைவர் முத்தையா விளக்க உரையாற்றினார்.

கீழ்காணும் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம், மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ செலவை திரும்பபெற பல்வேறு நிலைகளில், மாவட்ட,மாநில அரசு 555 கமிட்டியில் சுமார் 20,000 மனுக்கள் நிலுவையாக உள்ளது. இவைகளை தமிழக அரசு உடன் தீர்த்து வைக்க வேண்டியுள்ளது. தமிழக முதல்வர் சட்டமன்ற தேர்தலில் ஓய்வூதியர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் கூடுதல் ஓய்வூதியம் பெறும் வயதை 80 –லிருந்து 70– ஆக குறைக்க வேண்டும்.

சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி பணியாளர்களின், கிராம உதவியாளர், ஊராட்சி எழுத்தர் ஆகியோர்களுக்கு குறைந்த பட்ச ஓய்வூதியம் வழங்கிட வேண்டும், 4.புதிய ஓய்வூதியத்தை கைவிட்டு பழைய ஓய்வூதியத்தை அமல்படுத்த வேண்டும், மேலும் நிலுவையில் உள்ள பென்ஷனை உடனடியாக அமல்படுத்த வேண்டும். அனைத்துதுறைகண்ணன் வட்ட பொருளாளர் முண்டன், ஆசிரியர் அருளாந்து, செயற்குழு உறுப்பினர் காமாட்சி, வடகாடுகணபதி,கந்தசாமி, முத்,து இபன், செல்வம் ,சத்துணவு அமைப்பாளர் சுலோச்சனா, துணை வட்டாட்சியர் தலைமை வரையாளர் ரங்கசாமி மற்றும் ராஜமாணிக்கம் நன்றி கூறினார்.



தருமபுரி அரசுக் கலைக்கல்லூரி கலை அரங்கில் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடங்களுக்கான நேர்காணல் நடைபெற்று வருவதை கலெக்டர் திவ்யதர்சினி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# மத்தியப் பிரதேசத்தில் மனைவிக்கு வாட்ஸ் அப்பில் மெசேஜ் அனுப்பி விட்டு தற்கொலை செய்து கொண்ட கணவன்

மத்தியப்பிரதேசம் ஏப்.20–

மத்தியப் பிரதேசத்தில் வேலை கிடைக்காத விரக்தியில் வேலையில் இருக்கும் வேறொருவரை திருமணம் செய்துகொள்ளுமாறு மனைவிக்கு வாட்ஸ் அப் மெசேஜ் அனுப்பி விட்டு கணவன் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மத்திய பிரதேச மாநிலம்சிந்த்வாராவைச் சேர்ந்தவர் சதீஷ் பிஜாடே. அவருக்கு தற்போது 35 வயது ஆகிறது. 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் சமோட்டா திவாரியை மணந்த இவர், ஹர்தா பகுதியில் வசித்து வந்தார். பி டெக் பட்டதாரியான சதீஷ், கடந்த சில நாட்களாக வேலை இல்லாமல் இருந்தார். இவரது மனைவி வனத்துறை அதிகாரியாக பணியாற்றி வருகிறார். திருமணத்துக்குப் பிறகு இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டுசிலநாட்களுக்கு முன் இருவரும் விவாகரத்துக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இந்நிலையில் சமோட்டா வேலைக்கு சென்றிருந்த போது வேலை கிடைக்காமல், விவாகரத்தை எதிர்நோக்கிய நிலையில் விரக்தியின் உச்சத்தில் இருந்தசதீஷ் தற்கொலை செய்து கொள்ள முடிவெடுத்தார். அதற்கு முன் தன் மனைவிக்கு வாட்ஸ் அப்பில் மெசேஜ் ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த செய்தியில், “நான் போகிறேன்.

நீ நல்லா இரு! வேலை இருக்கிற வேற ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கோ” என்று குறிப்பிட்டுள்ளார். இதைப் படித்துவிட்டு கணவனை அழைக்க முயன்றாள் மனைவி. போனை யாரும் எடுக்காததால் காவல்துறைக்கு தகவல் கொடுத்தாள். காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, சதீஷ் தூக்கில் தொங்கிய நிலையில் பிணமாக கிடந்தார். இரண்டு பக்க உருக்கமான தற்கொலைக் குறிப்பையும் அவர் விட்டுச் சென்றுள்ளார். உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பிவைத்த காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.








சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கணவாய் புதூர் ஊராட்சி கண்ணம்பாடி மலை கிராமத்தில் தமிழக அரசால் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்கள் தொடர்பாக நேற்று மாவட்ட ஆட்சித்தலைவர் கார்மேகம் ஆய்வு மேற்கொண்டபோது நியாய விலை கடைகளில் வழங்கப்படும் அரிசியின் தரம் குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.உடன் காடையாம்பட்டி வருவாய் வட்டாட்சியர் அருள் பிரகாஷ் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.




சென்னை வியாசர்பாடி எம்.கே.பி.நகர் 13 வது மத்திய குறுக்கு தெரிவில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு மின்சார வாரிய ஊழியர்கள், மின்சார பணி சம்பந்தமாக பள்ளம் தோண்டி மின் ஒயர் கேபிலை வெட்டி மின்சார ஊழியர்கள் பணி புரிந்தனர். பின்னர் அந்த பள்ளத்தை மூடாமல் சென்று விட்டனர் மின்சார கேபில் ஒயர் வெளியே தெரிவதால் இது குறித்து அப் பகுதி பொதுமக்கள் அதிகாரிகளிடம் புகார் அளித்தும் யாரும் இதுவரை பள்ளத்தை மூட எந்த நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகின்றது. எதும் பெரிய விபத்து நடப்பதற்குள் நடவடிக்கைகள் எடுப்பார்களா?



கேரளமாநிலம் திருவனந்தபுரத்திலிருந்து சாமிதரிசனம் முடித்து கொண்டு ரெயிலில் சென்னை திரும்பிய பக்தர்களுக்கு அரக்கோணம் ரெயில் நிலையத்தில் ,அரக்கோணம் ஜாமியா மசூதி நிர்வாக கமிட்டி உறுப்பினர் ஹாரூன்ரஷீத் மதநல்லிணக்கத்தை போற்றும் வகையில் 40 பக்தர்களுக்கு சிற்றுண்டி மற்றும் தண்ணீர் பாட்டில்களை வழங்கினார்.

## திரிபுராவில் மனைவியின் நடத்தையில் சந்தேகம்

# வேறு நபருடன் கட்டாய திருமணம் செய்து வைத்த கணவன்



திரிபுரா ஏப்.20–

திரிபுராவில் திருமணத்திற்கு புறம்பான உறவில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கணவன் தலைமையிலான கும்பல் கொடூரமாக ஒரு பெண்ணை தாக்கியுள்ளது. அந்த கும்பல், அப்பெண்ணுக்கு காதலன் என்று கூறப்படும் நபருடன் கட்டாயமாக திருமணமும் செய்து வைத்துள்ளது.

இந்த சம்பவம் திரிபுராவின் கோவாய் மாவட்டத்தில் நடந்ததாக போலீசார் தெரிவித்தனர். தெலியமுரா காவல் நிலையப் பகுதியில் உள்ள மத்திய கிருஷ்ணாபூரில் சனிக்கிழமை இரவு அந்தப் பெண் தாக்கப்பட்டதாகவும், தற்போது அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெலியமுரா காவல் நிலையப் பொறுப்பதிகாரி சுபிமல் பர்மன் கூறினார்.

பாதிக்கப்பட்ட அந்த பெண்ணின் வாக்குமூலம் விசாரணை அதிகாரியால் மருத்துவமனையில் இருந்து பதிவு செய்யப்பட்டது. இதில், ’தனது கணவர் உட்பட 15 பேர் சேர்ந்து தன்னை நெல் வயல் பகுதிக்கு அழைத்துச் சென்றதாக அப்பெண் தெரிவித்துள்ளார். அந்த கும்பல் அவளை இரக்கமின்றி தாக்கியதுடன், தனது காதலன் எனக் கூறப்படும் நபரை கட்டாயமாக திருமணம்செய்துகொள்ள வற்புறுத்தியதாகவும் அந்த பெண் கூறினார். தாக்கப்பட்டதால் சுயநினைவை இழந்ததாகவும் அவர் கூறினார்’ என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டையில் ஒன்றிய அரசின் இந்தித் திணிப்பைக் கண்டித்து சிபிஎம் ஆர்ப்பாட்டம்



புதுக்கோட்டை ஏப்.20–

அலுவல் மொழி என்ற பெயரில் ஒன்றிய அரசின் இந்தி திணிப்பைக் கண்டித்து புதுக்கோட்டையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை அண்ணா சிலை அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் மாவட்டச் செயலாளர்எஸ்.கவிவர்மன் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம் கண்டன உரையாற்றினார். கோரிக்கைகளை விளக்கி மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கர், ஏ.ஸ்ரீதர், கே.சண்முகம், சி.அன்புமணவாளன், சு.மதியழகன், துரை. நாராயணன், எஸ். ஜனார்த்தனன் உள்ளிட்டோர் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட குழு உறுப்பினர்கள், ஒன்றியச் செயலாளர்கள், இடைக்கமிட்டி உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

## அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகே

# கீழக்காவட்டாங்குறிச்சியில் வருமுன் காப்போம் திட்ட சுகாதார திருவிழா



அரியலூர் ஏப்.20–

அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகே கீழக்காவட்டாங்குறிச்சி கிராமத்தில் வருமுன் காப்போம் திட்ட சுகாதாரத் திருவிழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், கீழக்காவட்டான்குறிச்சி கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற, சுகாதாரத் திருவிழா மற்றும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாமுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் பெரமணசரஸ்வதிதலைமை வகித்தார். அரியலூர் மாவட்ட சுகாதாரத்துறை துணை இயக்குனர் கீதாராணி திட்ட விளக்க உரையாற்றினார். பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, சிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் சிறப்புரையாற்றினார்.

பொதுசுகாதாரத்துறை சார்பில்பல்வேறு மருத்துவ விளக்க அரங்கங்கள் அமைக்கப்பட்டு, சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்ட இம்முகாமில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சுந்தர் ராஜன், அரியலூர் மாவட்ட ஊராட்சித் தலைவர் சந்திரசேகர், திருமானூர் ஊராட்சி ஒன்றியக்குழுதலைவிசுமதி அசோகச் சக்கரவர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் கீதா ஜெயவேல், ஒன்றியக்குழு உறுப்பினர் சுதாகர், கீழக்காவட்டாங்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், திருமானூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செந்தில்குமார், ஜாகிர் உசேன், மாவட்ட செய்தி மக்கள்தொடர்புஅலுவலர் சுருளி பிரபு, பொது சுகாதாரத்துறைஅலுவலர் குமார் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். முடிவில் திருமானூர் வட்டார மருத்துவ அலுவலர் மேகநாதன் நன்றி கூறினார்.



பாப்புலர் அப்பளம் புதுகை வரலாறு நாளிதழ் இணைந்து வழங்கிய எஸ்தர் ஃபைன் ஆர்ட்ஸ் ஜார்ஜ் ரூபன் வழங்கிய பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு விருது வழங்கும் விழா சென்னை பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் நீதியரசர் கோ.சு. ஆறுமுகம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விருதுகள் வழங்கினார் . இந்த நிகழ்ச்சியில் காங்கிரஸ் கட்சியின் ஓபிசி பிரிவு மாநில பொதுச்செயலாளர்கே. ராஜா முகமது மற்றும் என். ரமேஷ்குமார், கே கருணாகரன், என்.எஸ். ரமேஷ் சி. ரமேஷ் ,லயன் ரஜினி, அன்பு சுந்தரம் பி ஜோதிமணி, ஏ.திலகவதி, எஸ்.சிவதாஸ்,எஸ். கனகராஜ் எஸ். விஜயலட்சுமி ஆர். சந்தியா ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்ச்சியை சிந்தனை வாசன் கவிஞர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் தொகுத்து வழங்கினர் ,நிகழ்ச்சி அமைப்பு எஸ்தர் ஃபைன் ஆர்ட்ஸ் ஜார்ஜ் ரூபன், இந்த விழாவில் நளினி சங்கர் வழங்கிய ராகாஸ் இசைக் குழுவினரின் மாபெரும் இன்னிசை விழா நடைபெற்றது

# ஆம்வே நிறுவனத்தின் 758 கோடி ரூபாய் சொத்துகளை முடக்கிய அமலாக்கத்துறை

திண்டுக்கல் ஏப்.20–

ஆம்வே நிறுவனத்தின் 758 கோடி ரூபாய் சொத்துகளை முடக்குவதாக தெரிவித்துள்ள அமலாக்கத் துறை, அந்நிறுவனத்தின் எம்எல்எம் திட்டத்தில் முறைகேடுகள் நடைபெற்றதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆம்வே நிறுவனம் 2002ஆம் ஆண்டிலிருந்து 2022ஆம் ஆண்டு வரை இந்தியாவில் 27 ஆயிரத்து 562 கோடி ரூபாய் வருவாய் ஈட்டியதாகவும், இதில் 7 ஆயிரத்து 588 கோடி ரூபாயை விநியோகஸ்தர்களுக்கு கமிஷனாக அளித்ததாகவும் அமலாக்கத்துறை கூறியுள்ளது. ஆம்வே–யின் பல அடுக்கு சந்தைப்படுத்தல் (எம்எல்எம்) முறையில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும் அமலாக்கத்துறை கூறியுள்ளது.




ஆம்வேவின் பல தயாரிப்புகளின் விலைகள் சந்தையில் பிரபலமாக உள்ள மற்ற நிறுவன தயாரிப்புகளின் விலையை விட மிக அதிகமாக இருந்ததாக அமலாக்கத்துறை கூறியுள்ளது. ஆம்வேயின் பொருட்களை மிக அதிக விலை கொடுத்து வாங்க பலர் தூண்டப்பட்டு அவர்கள் பண இழப்பை சந்தித்தனர் என்றும் அமலாக்கத்துறை கூறியுள்ளது. ஆம்வே நிறுவனம் தனது வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக ஆடம்பரமாக கூட்டங்களை நடத்தியதுடன் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் வாடிக்கையாளர்களுக்கு வலை வீசியதாக அமலாக்கத்துறை கூறியுள்ளது.

முறைகேடு புகார்களையடுத்து ஆம்வேயின் வங்கிக் கணக்குகளை முடக்கியுள்ளதுடன் திண்டுக்கல்லில் உள்ள ஆலைகளையும் இயந்திரங்களையும் முடக்கியுள்ளதாக அமலாக்கத்துறை கூறியுள்ளது. இதற்கிடையே இந்திய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே தங்கள் செயல்பாடுகள் இருந்ததாக ஆம்வே விளக்கம் அளித்துள்ளது. தங்கள் வணிகம் குறித்த தவறான தகவல்களை பரப்புவதால் 5 லட்சத்து 50 ஆயிரம் நேரடி விற்பனையாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதால் அதை தவிர்க்க வேண்டும் என்றும் ஆம்வே கேட்டுக்கொண்டுள்ளது.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# ஆளுநர் கார் மீது தாக்குதல் மயிலாடுதுறையில் பரபரப்பு





# இலங்கையில் போராட்டம் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் கொலை

# சர்ப்ரைசாக கொலை செய்ய மணமகனை அழைத்த மணமகள்






சென்னை / புதுக்கோட்டை | 20.04.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சிட்டி பெ. கோ. சுந்தரராஜன், தமிழக எழுத்தாளர் (பி, 1910) (இ. 2006)



சாரணபாஸ்கரன், தமிழகக் கவிஞர், இதழாளர் (பி, 1923) (இ. 1986)



நா. சந்திரபாபு நாயுடு, ஆந்திராவின் 13வது முதலமைச்சர் (பி, 1950)



## இன்றைய நினைவு நாள்

திருக்கண்ணபுரம் விஜயராகவன், தமிழகக் கணிதவியலாளர் (பி, 1902) (இ. 1955)



ராஜ ஸ்ரீகாந்தன், ஈழத்து எழுத்தாளர் (பி, 1948) (இ. 2004)



ர. சு. நல்லபெருமாள், தமிழக எழுத்தாளர் (இ. 2011)



சண்முகம் சிவலிங்கம், ஈழத்துக் கவிஞர் (பி, 1936) (இ. 2012)



புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.
தொடர்புக்கு: 04322 261577

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்